

திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதி காட்டூர் பகுதியில் நிறுவப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உருவச்சிலையை அவரது நினைவு நாளில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொளி காட்சி மூலம் திறந்து வைத்தார். இதனை முன்னிட்டு கழக தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை மாவட்டச் செயலாளர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நேரில் சந்தித்து கணையாழி (மோதிரம்) அணிவித்து மாவட்ட தி.மு.க. நிகழ்ச்சி பதிவேட்டில் கையெழுத்து பெற்று நன்றி தெரிவித்தார் .



புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம், தச்சம்பட்டி கிராமத்தில், புதிதாக அமைக்கப்பட்டுள்ள மின்மாற்றியினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி 09.08.2024 அன்று துவக்கி வைத்தார். உடன் பொன்னமராவதி ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.சுதா அடைக்கலமணி, பொன்னமராவதி பேரூ ராட்சித் தலைவர் திருமதி.சுந்தரி அழகப்பன், மின்சார வாரிய செயற்பொறியாளர் திருமதி.எம்.ஆனந்தாய், உள்ளாட்சி அமைப்புக ளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

நிலக்கரிப் பற்றாக்குறையினால், சென்னை போன்ற பெருநகரங்களில் -

# மின்சார உற்பத்திப் பாதிப்பினை தடுத்திட அரசின் நடவடிக்கைகள் என்னென்ன?

## மக்களவையில் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி, ஆக. 13 -

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் 08ஆகஸ்ட் 2024அன்று மக்களவையில், சென்னை, டெல்லி, மும்பாய், கொல்கத்தா போன்ற பெரு நகரங்களில், நிலக்கரி பற்றாக்குறையின் காரணமாக, மின்சார உற்பத்தி தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருவதை தடுக்க, ஒன்றிய அரசின் நடவடிக்கைகள் என்னென்ன? என்றும், தேவைக்கு ஏற்ற வகையில் மின்சார உற்பத்தியைப் பெருக்க திட்டங்கள் உள்ளனவா?என்றும் அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும், ஒன்றிய அரசின் எரிசக்தித் துறை இணைய மைச்சர் ஸ்ரீபத் நாயக் அவர்களிடம் கேள்வி



எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் எரிசக்தித் துறை இணைய மைச்சர் அமைச்சர்அவர்கள் அளித்த பதில் பின்வருமாறு:

கடந்த ஜூலை 2024 வரையில் மின்சார உற்பத்திக்கு தேவையான நிலக்கரி, அனைத்து மின் உற்பத்தி நிலையங்களிலும், 46 மெட்ரிக் டன்கள் என்ற அளவிற்கு, இருப்பில் வைக்கப் பட்டுள்ளது என்றும், இந்த நிலக்கரி அடுத்த 160 நாட்களுக்கு போதுமானதா இருக்கும் என்றும், மின்சார உற்பத்தியின் அளவு கடந்த ஜூன் 2024 வரையில், 4,41,190 மெகா வாட்களாக உள்ளது என்றும், 80,000 மெகாவாட் அளவிற்கு அனல் மின்சாரமும், 18,090 மொக வாட் அளவிற்கு புனல் மின்சாரமும், 73000 மெகா வாட் அளவிற்கு அனுஉலை மின்சாரமும், வருகின்ற 2031-32 ஆண்டிற்குள் உற்பத்தி செய்யப்படும்.

மேலும், வருகின்ற 2026 27 ஆண்டிற்குள் 1,77,755 மெகா வாட் அளவிற்கு மின் கடத்தி கோபுரங்கள் அமைக்கப்படும் என்றும், புதுப்பிக்கத் தக்க எரிசக்தியின் உற்பத்தியை மேம்படுத்த பல்வேறு சலுகைகள் அளிக்கப்பட்டு வருகின்றன என்றும், 13 நகரங்களில் புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கான மேலாண்மை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வருகின்ற 2031-32ஆண்டிற்குள்ளாக 5,00,000 மெகா வாட் அளவிற்கு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி செய்யப்படும் என்றும், தேசிய அளவில் மின்பகிர்மான கட்டமைப்புக்கு ரூபாய் 2.6 இலட்சம் கோடிகள் அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும், எரிசக்தி மேம்பாட்டு நிதியத்தின் கீழ் 188 திட்டங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளன என்றும்,ஒன்றிய அரசு, மின்சார உற்பத்தியைப் பெருக்க பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இவ்வாறு ஒன்றிய எரிசக்தித் துறை இணையமைச்சர் ஸ்ரீபத் நாயக் எஸ். ஜெகத்ரட்சகன் எழுப்பிய கேள்விக்கு பதில் அளித்துள்ளார்.

விழுப்புரம் மாவட்டத்தில்

# 3 ஆண்டுகளில் 15 ஆயிரம் இலவச வீட்டுமனை பட்டாக்கள்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் வழங்கி பேச்சு!

திண்டிவனம், ஆக. 13 -

விழுப்புரம் மாவட்டம் ஊரக வளர்ச்சி துறை சார்பில் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் மயிலம் ஒன்றியத்தில் உள்ள கிராமங்களில் வீடு கட்டுவதற்கான ஆணைகள் வழங்கும் நிகழ்ச்சி மயிலம் தனியார் மண்டபத்தில் நடைபெற்றது.

மயிலம் ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன் தலைமை வகித்தார்.துணை சேர்மன் புனிதா ராமஜெயம் முன்னிலை வகித்தார்.

வட்டார வளர்ச்சி அலுவலர் ரவி அனைவரையும் வரவேற்றார்.

இந்நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் கலந்து கொண்டு 8 கோடியே 42 லட்சத்து 28 ஆயிரத்து 200 ரூபாய் மதிப்பீட்டில் 238 பயனாளிகளுக்கு வீடு கட்டுவதற்கான உத்தரவு ஆணைகளை வழங்கி சிறப்புரை யாற்றினார்.



அப்போது நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான்;

முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆட்சியில் தீப்பிடிக்காத கான்கிரீட் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தினை இந்தியாவிலேயே முதன் முதலில் அறிமுகப்படுத்தியவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர்.

ஒன்றிய அரசின் நிதி உதவி இல்லாமல் முதன் முதலில் கலைஞர் தீப்பி டிக்காத கான்கிரீட் வீடுகளை கட்டிக் கொடுத்த பெருமை கலைஞருக்கு அன்றும் இன்றும் இருக்கிறது.

அவர் வழியில் இன்று திராவிட மாடல் ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்றைக்கு கலைஞர் கனவு இல்லம் வீடுகள் கட்டும் திட்டத்தில் தமிழக முழுதும் 1 லட்சம் வீடுகள் கட்டுவதற்கும்

விழுப்புரம் மாவட்டத்தில் 4700 வீடுகள் கட்டுவதற்கு உத்தரவிட்டுள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தில் ஒரு வீட்டிற்கு 3 லட்சத்து 50 ஆயிரம் முழுவதும் தமிழக அரசின் நிதியில் கட்டுவதற்கு நிதியை ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டுள்ளதாக தெரிவித்த அமைச்சர் செஞ்சி.மஸ்தான் ஒன்றிய அரசு தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு கொடுக்கும் நிதியை காட்டிலும் 2 மடங்கு கூடுதலாக தொகை கொடுத்து கிராமத்தில் தொகுப்பு வீடுகளை கட்டுவதற்கு முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளதாகவும், கடந்த 3 ஆண்டுகளில் விழுப்புரம் மாவட்டத்தில் மட்டும் 15ஆயிரம் கலைஞர் கனவு இல்லம் கட்டப்பட்டுள்ளதாக அமைச்சர் செஞ்சி மஸ்தான் கூறினார்.

இதில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர்.சேகர்,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள்டாக்டர் மாசிலாமணி, சேதுநாதன்,ஒன்றிய செயலாளர்கள் மணிமாறன்,செழியன்,துணை வட்டார வளர்ச்சி அலுவலர் வெண்பா,மாவட்ட கவுன்சிலர் விஜயன்,மாவட்ட அணி அமைப்பாளர்கள் அன்சாரி, செந்தில் குமார், விவசாய அணி துணை தலைவர் நெடி.சுப்ர மணியன், மாவட்ட பிரதிநிதிகள் சேகர், பிரகாஷ், கவுன்சிலர்கள் பரிதா சம்சுதீன், உமா ஞானசேகர், கண்ணன், ஊராட்சி மன்ற தலைவர்கள்அருணா, பாக்கியராஜ், செந்தில்குமார் மற்றும்தி.மு.க. நிர்வாகிகள் பிரபு, ரமேஷ், உதயவாணன், அன்பு சேகர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

வட்டார வளர்ச்சி அலுவலர் இராமதாஸ் நன்றி கூறினார்.


13.08.2024



முன்னாள் சைதை சட்டமன்ற உறுப்பினர்
தொ.மு.ச. பேரவை பொதுச் செயலாளர்
**வை.பெருமாள்**
அவர்களின் 23ஆம் ஆண்டு நினைவேந்தல்

இறுதி மூச்சுவரை இயக்கத்திற்காக உழைத்த உத்தமன் என "தலைவர் கலைஞர்" அவர்களால் பாராட்டப்பட்ட எங்கள் குடும்பத் தலைவர் "வை.பெருமாள்" அவர்களின் கழகப் பணியினை, தியாகத்தை போற்றும் நிகழ்வுகளை "பாட்டாளிகளின் உயிர் தோழன் வை.பெருமாள்" என்ற தலைப்பில் உருவாக்கிட வழிவகை செய்த
மாண்புமிகு தமிழக முதல்வர் - கழகத் தலைவர்
**மு.க.ஸ்டாலின்** அவர்களுக்கும்
முரசொலியின் இளைஞர் அணி பாசறை பகுதியில் வெளியிடச் செய்த
மாண்புமிகு அமைச்சர் – கழக இளைஞர் அணிச் செயலாளர்
**உதயநிதி ஸ்டாலின்** அவர்களுக்கும்
இந்நினைவுநாளில் எங்கள் இதயம் நிறைந்த நன்றிகளை சமர்ப்பிக்கிறோம்.

என்றும் உங்கள் வழியில்
**பா.நவலடி ராஜா** MCA., LLB..,
மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்
நாமக்கல் மேற்கு மாவட்டம்

**வை.பெருமாள் குடும்பத்தினர்**
வழக்கறிஞர் **செல்லப்பா பாலசுப்ரமணியன்** குடும்பத்தினர்
பரமத்தி வேலூர், நாமக்கல் மாவட்டம்.




தி.மு.கழகத்தினுடைய 'பீமசேனன்' வை.பெருமாள் என்று சொன்னால் அது மிகையாகாது

ARASU ARTS